சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – “அனைத்து மாவட்ட நூலக வலைதளங்களை மேம்படுத்துதல்” – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.134 | நாள் 06.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆனி–22

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண்.5765/உ3/2018, நாள் 01.06.2018 மற்றும் 27.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

“பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக்குழு வலைதளங்களை, அனைத்து வாசகர்களுக்கும் பயன்படும் வகையில் மேம்படுத்தி வலைதள சேவை விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.19.20 இலட்சம் செலவிடப்படும்.”

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், 2018–19–ம் ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்பான "அனைத்து மாவட்ட நூலக வலைதளங்களை மேம்படுத்துதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, இளைய தலைமுறையினர், இணைய பயன்பாட்டில் அதிக ஆர்வத்துடன் செயல்படுவதுடன், அவற்றை பயன்படுத்துவதும் பெருமளவில் விரிவடைந்து வரும் நிலையில் குறிப்பாக அலைப்பேசி சாதனங்கள் மூலம் இணையத்தை பயன்படுத்தும் சூழலும் நிலவும் நிலையில், பொது நூலகங்கள் சார்ந்த அனைத்து விவரங்கள், தகவல்கள், வாசகர்கள் எங்கிருந்தும் பயன்படுத்தும் வகையில், வலைதளத்தினை மேம்படுத்தி உருவாக்கம் செய்து, அவ்வலைதளமானது அனைவரையும் கவர்வதுடன், அனைத்து வாசகர்களும் எளிதாக பயன்படுத்தும் வகையில், மேம்படுத்தப்பட்ட வலைதள சேவை வழங்குவதற்கான பணிகளை உரிய விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் மாவட்டமொன்றிற்கு ரூ.60,000/– வீதம் அந்தந்த மாவட்ட நூலக அலுவலர் அளவில் 32 மாவட்டங்களுக்கு ரூ.19,20,000/–ஐ (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டின் அறிவிப்பான"அனைத்து மாவட்ட நூலக வலைதளங்களை மேம்படுத்துதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, மேம்படுத்தப்பட்ட வலைதள சேவை வழங்குவதற்கான பணிகளை உரிய விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் மாவட்டமொன்றிற்கு ரூ.60,000/– வீதம் அந்தந்த மாவட்ட நூலக அலுவலர் அளவில் 32 மாவட்டங்களுக்கு ரூ.19,20,000/–ஐ (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2198/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 26.06.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.